# திருப்பூர் மாநகராட்சி

**2018 ஜனவரி மாதம் 31–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 187 முதல் 202 வரை**

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆம் தேதி 31 புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**187)** திருப்பூர் மாநகராட்சியில் மைய அலுவலகத்தில் கணிணி புள்ளி விபர பதிவுகளை பதிவு செய்ய வெளியாட்கள் மூலம் 6 நபர்களை பணியமர்த்துதல் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.11.10 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டு, 05–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை . ரூ. (ஒரு நபருக்கு நாளொன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை .ரூ. (ஒரு நபருக்கு 292 நாட்களுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை.ரூ. (6 நபருக்கு 292 நாட்களுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | M/s. Master Mind அவினாசி | 633/– | 1,84,836/– | 11,09,016/– |
| 2. | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ்,திருப்பூர். | 650/– | 1,89,800/– | 11,38,800/– |
| 3. | M/s. Faicon (c) Security Services Pvt. LTd., கோயம்புத்தூர். | 1,79,712/– | 5,24,75,904/– | 31,48,55,424/– |
| 4. | M/s. Avalache Security Services,கோயம்புத்தூர். | 647/– | 1,88,924/– | 11,33,544/– |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான M/s. Master Mind, அவினாசி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரப்படி உள்ளதால், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ.1 / 6871 / 2017)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**188)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும், அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01–12–2017ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய

**188–ன் தொடர்ச்சி**

22–11–2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30–11–20107ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் 01–12–2017ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. எனவே மூன்று மாத காலத்திற்கு 01–12–2017 முதல் 28–02–2018ம் தேதி வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.48.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம். ( இ.2 / 6112 / 2017)

– – – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**189)** திருப்பூர் மாநகராட்சியில் 2014–2015ம் ஆண்டு IUDM திட்டத்தின் கீழ் ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் சந்தைபேட்டை பகுதியில் 10 டன் கொள்ளளவு கொண்ட Bio Methanation plant அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றுள்ளது. இதன் மூலம் தினசரி சுமார் 825 யூனிட் மின் உற்பத்தி செய்யலாம் அல்லது 250 கிலோ இயற்கை எரிவாயு தயார் செய்யலாம். ( 550 க.மீ. வாயு or 19 kg எடையுள்ள 13 எரிவாயு உருளைகள் நிரப்பலாம்.) உற்பத்தி ஆகும் மின்சக்தியை TANGDCO விதிமுறைகளின்படி மின்தொகுப்பில் (Grid) இணைப்பு செய்து பயன்படுத்த இயலவில்லை. இதனால் இந்த ஆலை முழு பயன்பாட்டிற்கு வரவில்லை.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 10–01–2018ம் தேதிய கடிதம் ந.க.எண். 47666/2012/பி.3, எண்ணிட்ட கடிதத்தில் இந்த ஆலையை முழு பயன்பாட்டிற்கு கொண்டுவர தனியார் மூலம் PPP முறையில் ஆலையில் உற்பத்தியாகும் எரிவாயுவினை உருளைகளில் நிரப்ப உரிய சாத்திய கூறுகள், நிதி ஆக்கம் மற்றும் தற்போதுள்ள ஆலையினை மேம்பாடு செய்தல் இயக்கமும் பராமரிப்பும் செய்தல் மற்றும் திட்ட செலவினத்தை திரும்ப பெறுதல் போன்றவற்றினை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய கலந்தாய்வாளராக The Environmental Division, Central Leather Research Institute Adyar, Chennai அவர்களை நியமனம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே திருவாளர்கள் The Environmental Division, Central Leather Research Institute Adyar, Chennai அவர்களை " Enhance the existing BMP with additional facilities to switch into bottling plants" பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க கலந்தாய்வாளராக நியமிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ( இ.1 / 447 / 2018)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**190)** திடக்கழிவு மேலாண்மை பணியில் வார்டு எண். 16 முதல் 45 வரை ( மண்டலம் 2 மற்றும் 3 ) பகுதிகளில் வீடுவீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தெடுத்தல், மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் மற்றும் வடிகால்வாய்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு தனியார் மயப்படுத்த 27–01–202ம் தேதிய மாமன்ற தீர்மான எண். 229ல் அனுமதி பெறப்பட்டு 12–08–2013ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 30–08–2013ம் தேதிய மாமன்ற தீர்மான எண். 548ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு 02–02–2014 முதல் பணி நடைபெற்று வருகிறது.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை 2.7ன்படி ஒப்பந்தப்புள்ளியினை நீடிப்பு செய்யலாம். இந்த ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை எண். 7.6.2ன்படி ஒவ்வொரு ஆண்டும், முந்தைய ஆண்டினை விட அடுத்த ஆண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றிற்கு 10 சதவீதம் வீதம் உயர்வுடன் இப்பணி மேற்கொள்ளலாம். இவ்வலுவலக 14–12–2017ந் தேதிய ந.க.எண். எண். இ.2 / 6901 / 2017ன்படி இரண்டு ஆண்டுகளுக்கு பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை எண். 2.7ன் படி 01–02–2018 முதல் 31–01–2020 தேதி வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. எனவே அதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு 10 சதவீத உயர்வுடன் 01–02–2018 முதல் 31–01–2019 வரை ஆகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 6901 / 2017 )

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**191)** திருப்பூர் மாநகராட்சியில் AMRUT 2017-20 திட்டத்தின் கீழ் ( மாமன்ற தீர்மானம் எண்.160, நாள் 29–11–2017) நிர்வாக அனுமதி பெறப்பட்ட மண்டலம் –1க்குட்பட்ட கீழ்க்கண்ட 2 பணிகளுக்கு 28–12–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 28–12–2017 அன்று 2 பணிகளுக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையை விட) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்குப்பின்) (மதிப்பீட்டு விலையை விட) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 3 | **R.V.S.** கார்டன் பகுதியிலுள்ள பூங்காவில் மேம்பாட்டு பணிகள் செய்தல் **(மதிப்பீடு.ரூ.53.628 இலட்சம்)** | M/s.ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் | ரூ.43,67,540/- 5.29% அதிகம். | ரூ.43,54,340/- 4.97% அதிகம். |
| | | | திரு.S.செல்வராஜ் | ரூ.44,76,747/- 7.92% அதிகம். | ---- |
| 2. | 14 | ஆனந்தா கார்டன் பகுதியிலுள்ள பூங்காவில்மேம்பாட்டுப் பணிகள் செய்தல் **(மதிப்பீடு.ரூ.48.628 இலட்சம்)** | திரு.V.அருணாசலம் | ரூ.43,02,855/- 5.33% அதிகம். | ரூ.42,88,555/- 4.98% அதிகம். |
| | | | M/s.ஸ்ரீ சாயி அசோசியேட்ஸ் | ரூ.44,26,558/- 8.36% அதிகம். | ---- |

**191–ன் தொடர்ச்சி**

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி பணிகள் திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவற்றை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 5.00%க்குள் அதிகமாக உள்ள கலம் எண்.6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம். (ம.எண். 133 / N / 2017-18)

– – – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**192)** இம்மாநகராட்சியில் மண்டலம் எண்.2ல் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு பி.சின்னதுரை என்பவர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 4163 / 2014 / J.1, நாள் 10–02–2014ன்படி ஓசூர் நகராட்சியிலிருந்து திருப்பூர் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் பணி மாறுதல் செய்யப்பட்டு 05–03–2014 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். தனது வயதான பெற்றோரை கவனிக்கவும், தனது குழந்தைகள் திருப்பூரில் கல்வி பயின்று வருவதாலும் தனக்கு திருப்பூர் மாநகராட்சியில் தொடர்ந்து நிரந்தர துப்புரவு ஆய்வாளராக பணிபுரிய உரிய உத்திரவு வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே திரு பி.சின்னத்துரை, துப்புரவு ஆய்வாளரது அயற்பணி நிலையினை மாற்றி நிரந்தரமாக திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரிய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். (சி.1 / 0099 / 2018)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**193)** திருப்பூர் மாநகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2017–18) நிதியின் கீழ், திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.3, ஸ்ரீவித்யா நகர் மெயின்வீதியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் 2000 LPH பொருத்தி 5000 லிட்டர் கொள்ளளவுள்ள சின்டெக்ஸ் டேங்க் பொருத்துதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. 23–01–2018 அன்று கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாய் | மதிப்பீட்டை விட | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் அகுவாஜோன் என்விரோடெக், திண்டுக்கல் | 1324600.00 | 0.06% குறைவு | செலுத்தியுள்ளனர். |
| 2 | திருவாளர்கள் கிளென்ஸ் அகுவாடெக் சொல்யூசன்ஸ், கோவை | 1335500.00 | 0.76% குறைவு | சிறு தொழில் நிறுவன சான்று இணைத்துள்ளனர். |

**193–ன் தொடர்ச்சி**

மேற்காண் பணிக்கு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்புநோக்குப் பட்டியல்படி மேற்கண்ட 2 நிறுவனங்களில் திருவாளர்கள் அகுவாஜோன் என்விரோடெக், திண்டுக்கல் அவர்கள் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.13,24,600.00 என்பது மதிப்பீட்டைவிட 0.06% குறைவாக உள்ளதால் இதனை ஏற்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழு தீர்மானித்துள்ளது. இவ்வகையில் மேற்காண் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். ( ம.எண். 174 / S / 17 – 18 )

- - - - -

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**194)**நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் நேர்முக கடித எண். 1588/2015 / ஜே.1, நாள் 15.06.2015, 28.03.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண். 2571 / J 1 / 2017 நாள் 14–02–2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த, தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் Hot Spotஆக கண்டறியப்பட்ட வார்டுகள் மற்றும் இதர டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட பகுதிகளிலும் ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணி புரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிக்கு 200 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் 800 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01–01–2018 முதல் 31–01–2018 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேசசெலவீனம் ரூ.61.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01.01.2018 முதல் 31.01.2018 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 800 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 2162 / 2017 )

- - -- - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**195)** நகராட்சி நிர்வாகம் ஆணையர், சென்னை அவர்களின் ந.க. எண்: எம்2/17934/2017 நாள்:30.06.2017 ம் தேதிய கடிதத்தில், அரசு துணை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்: 10157 / தேர்தல் /2017 நாள்:30.06.2017 –ல், தற்போதைய தமிழ்நாடு அரசு கேளிக்கை வரிச்சட்டம் 1939 (தமிழ் நாடு சட்டம் X–1939) –ல் மாநில அரசுக்கு கேளிக்கை வரி விதித்து வரி வசூல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டது என்றும் இதனை ரத்து செய்து, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல்வேறு கேளிக்கை மற்றும் பொழுது போக்கு இனங்களுக்கு கேளிக்கை வரி விதித்து வசூல் செய்ய உள்ளாட்சி துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும், தமிழ் நாடு கேளிக்கை வரிச்சட்டம் 1939 (தமிழ் நாடு சட்டம் X–1939 ) யினை, தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 ல் பிரிவு 174 ல் ரத்து செய்து, அரசாணை (எம்.எஸ்) எண்: 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 29.06.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்:195 நாள்:28.06.2017–ல் அரசு ஒரு புதிய பொதுவான சட்டத்தை உருவாக்கியுள்ளதின்படி, நகர் மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு தாமே கேளிக்கை மற்றும் பொழுது போக்கு இனங்களுக்கு கேளிக்கை வரி விதித்தும் மற்றும் வரி வசூலிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கிணங்க தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களுக்கு கேளிக்கை வரி சட்டம் 2017 ( தமிழ்நாடு சட்டம்2017) –ல் சட்டமாக்கப்பட்டுள்ளது எனவும், இச்சட்டம் 01.07.2017 ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை, தமிழ்நாடு அரசிதழ் மற்றும் துணை விதிகள்–2017( **BY-Laws)** ஆகியன மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** பதிவு செய்யலாம். ( அ.1 / 5928 / 2017)

– – – –

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

– – – –

**196)** அரசாணை (எம்.எஸ்) எண்: 102 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 26.09.2017 – ல் வெளியிடப்பட்ட சினிமா துறைக்கான கேளிக்கை வரியினை தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களுக்கு கேளிக்கை வரி சட்டம் 2017 பிரிவு 11 (2) (i) ன்படி உள்ள கேளிக்கை வரியை குறைவு செய்துள்ளது. மேற்படி அரசாணை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** பதிவு செய்யலாம். ( அ.1 / 5928 / 2017)

– – – –

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

– – – –

**197)** அரசாணை (எம்.எஸ்) எண்: 107 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்: 16.10.2017 – ல் வெளியிடப்பட்ட சினிமா துறைக்கான கேளிக்கை வரியினை தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களுக்கு கேளிக்கை வரி சட்டம் 2017 பிரிவு 11 (2) (i) ன்படி உள்ள கேளிக்கை வரியை குறைவு செய்துள்ளது. மேற்படி அரசாணை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** பதிவு செய்யலாம். ( அ.1 / 5928 / 2017)

– – – –

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

**198)**திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான இரண்டாவது மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் மத்தியில் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம் சுற்றிலும் மக்களால் அசுத்தம் செய்யப்படுவதாலும், மேலும் பேருந்து நிலையத்திற்கு மத்தியில் இருப்பதால் பொது மக்களுக்கு இடையூறாக இருப்பதாலும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நவீனப் பயன்பாட்டுக்கு பயன்படுத்த வேண்டியுள்ளதால், 2017–18 உடன் முடிவடையும் குத்தகை உரிமத்தை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் இரத்து செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் மற்றும் மாநகர பொறியாளர் குறிப்பின்படி புதிய பேருந்து நிலைய இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தை குத்தகை உரிமத்திலிருந்து இரத்து செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடம் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இதனை சுற்றி தடுப்பு அமைந்துள்ள பகுதியில் பொது மக்களால் அசுத்தம் செய்யப்படுவதாலும், ஸ்மார்ட்சிட்டி பயன்பாட்டுக்கு தேவைப்படுவதாலும் உதவி செயற்பொறியாளர் மற்றும் மாநகர பொறியாளர் ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனவே குத்தகை உரிமத்தை இரத்து செய்ய அனுமதிக்கலாம். ( அ.1 / 460 / 2017 / ம.2)

– – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**199)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5 அவர்களின் நேர்முக கடித எண். 1588/2015 / ஜே.1, நாள் 15.06.2015, 28.03.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண். 2571 / J 1 / 2017 நாள் 14–02–2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த, தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் Hot Spotஆக கண்டறியப்பட்ட வார்டுகள் மற்றும் இதர டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட பகுதிகளிலும் ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணி புரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிக்கு 75 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை கருதி 01–02–2018 முதல் 28–02–2018 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேசசெலவீனம் ரூ.24.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>199–ன் தொடர்ச்சி</u>

அலுவலகக் குறிப்பு :

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01.02.2018 முதல் 28.02.2018 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 2162 / 2017 )

- - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**200)** திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்.14ல் உள்ள 53 எண்ணிக்கை ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரி செய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.13,70,000/–க்கு தயார் செய்யப்பட்டது. 07–12–2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்ட, மேற்படி பணிக்கு 28–12–2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.அதன்படி 28–12–2017–ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு M. பழனிச்சாமி | 12,00,768/– | மதிப்பீட்டு விலையை விட 0.11% குறைவு | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2. | திரு A. ஆறுச்சாமி | 12,08,400/– | மதிப்பீட்டு விலையை விட 0.53% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு M. பழனிசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.11 சதவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மதிப்பீட்டு விலையை விட 0.11 சதவிகிதம் குறைவாக வரப்பெற்ற மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( ம.எண். 155 / N / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

**201)** திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்.18ல் உள்ள 42 எண்ணிக்கை ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரி செய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.10,80,000/—க்கு தயார் செய்யப்பட்டது. 07—12—2017அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்ட, மேற்படி பணிக்கு 28—12—2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.அதன்படி 28—12—2017—ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு T. கோபால கிருஷ்ணன் | 9,51,552/— | மதிப்பீட்டு விலையை விட 0.11% குறைவு | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2. | M/S. A.R.S. & Co., | 9,57,600/— | மதிப்பீட்டு விலையை விட 0.53% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு T. கோபால கிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.11 சதவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மதிப்பீட்டு விலையை விட 0.11 சதவிகிதம் குறைவாக வரப்பெற்ற மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ம.எண். 159 / N / 2017—18)

— — — — —

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

— — — —

**202)** திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் வார்டு எண்.23ல் உள்ள 44 எண்ணிக்கை ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் மற்றும் விநியோக குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரி செய்தல் பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.11,32,000/—க்கு தயார் செய்யப்பட்டது. 07—12—2017அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்ட, மேற்படி பணிக்கு 28—12—2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.அதன்படி 28—12—2017—ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/S. ஜெகநாதன் அன் கோ., | 9,96,864/— | மதிப்பீட்டு விலையை விட 0.11% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/S. செந்தில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 10,03,200/— | மதிப்பீட்டு விலையை விட 0.53% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

**202–ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு. கோபால கிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 0.11 சதவிகிதம் குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மதிப்பீட்டு விலையை விட 0.11 சதவிகிதம் குறைவாக வரப்பெற்ற மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( ம.எண். 164 / N / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – –

(ஒம்) மா.அசோகன்
தனி அலுவலர்
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.